



தென்காசி மாவட்டம், குற்றாலம் சாரல் திருவிழா நிகழ்வு மாவட்ட நிர்வாகம் சார்பில் குற்றாலம் கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே. கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் பங்கேற்று சாரல் விழாவை துவக்கி வைத்து 'திராவிட மாடல்' அரசின் சாதனை விளக்க மலரை வெளியிட்டார். உடன் மாவட்ட ஆட்சியர் கமல் கிஷோர், தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஜெயபாலன், சட்டமன்ற உறுப்பினர்கள் ராஜா, பழனி நாடார், சதன் திருமலைகுமார், காவல்துறை கண்காணிப்பாளர் அரவிந்த், வன அலுவலர் அகில் தம்பி, மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன், திட்ட இயக்குனர் தண்டபாணி உள்பட பலர் உள்ளனர். குற்றாலம் சாரல் திருவிழாவில் கரகாட்டம் நிகழ்ச்சி நடைபெற்றது.

### தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் சார்பில் நடைபெற்ற பேச்சுப் போட்டிகளில்

# மாவட்ட - மாநில அளவில் வெற்றி பெற்ற மாணவ - மாணவியர்களுக்குப் பரிசுத் தொகை - சான்றிதழ்கள்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வழங்கினார்!

சென்னை, ஜூலை 22 -

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் 19.7.2025 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் சார்பில் நடைபெற்ற 2024-25ஆம் ஆண்டிற்கான அனைத்து கல்லூரி மாணவ, மாணவியருக்கான பேச்சுப் போட்டிகளில் மாவட்ட மற்றும் மாநில அளவில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுத் தொகை மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

கல்லூரிகளில் பயிற்றுவிக்கப்படும் பாடத்திட்டங்களுக்கு அப்பால், மாணவர்கள் அறிந்தும் உணர்ந்தும் தெளிய வேண்டிய உன்னத விழு மியங்களை மாணவர்களிடம் கொண்டு சேர்க்கவும், தமிழ் சமூகத்தின் தனித்துவமான பண்பாடுகளை, பெருமைகளை, இலக்கியங்களை, கலைகளை, வரலாற்றை மாணவர்கள் அறிந்து கொள்ளும் விதமாக தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் சார்பாக அனைத்து கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு தமிழ்நாட்டின் 38 மாவட்டங்களில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டன.

இப்பேச்சுப் போட்டிகள் (1) இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் சிறுபான்மையினருக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற பாதுகாப்பு உரிமைகளை திராவிட சித்தாந்தம், திராவிடமாடல் ஆட்சியில் எவ்வாறு உறுதிப்படுகிறது (2) திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டில் சிறுபான்மையினருக்கு கொடுக்கப்படுகின்ற பாதுகாப்பு, உரிமைகள், சிறப்பு திட்டங்கள், தனிமனித சுதந்திரத்திற்கும், சமுதாயத்திற்கும் எவ்வகையான முன்னேற்றங்களை ஏற்படுத்துகிறது (3) திராவிட மாடல் ஆட்சியில் சிறுபான்மையினருக்கு வழங்கப்படுகின்ற சிறப்பு திட்டங்கள் மற்ற மாநிலங்களைவிட எவ்வாறு சமூக நீதியை நிலை நாட்டுகிறது ஆகிய தலைப்புகளில் நடத்தப்பட்டது. இதில் சுமார் 16,000 மாணவ, மாணவியர்கள் பங்கேற்றனர்.

தமிழ் மற்றும் ஆங்கில பேச்சுப் போட்டிகளில் மாவட்ட அளவில் 38 மாவட்டங்களில் 228 மாணவ, மாணவியர்கள் வெற்றி பெற்றனர். இதில் முதல் பரிசு பெற்றவர்களுக்கு ரூ.20,000/- இரண்டாம் பரிசு பெற்றவர்களுக்கு ரூ.10,000/- மற்றும் மூன்றாம் பரிசு பெற்றவர்களுக்கு ரூ.5,000/- வழங்கப்படுகிறது.

மாவட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு இடையே மாநில அளவில் சென்னை, இலயோலா மேலாண்மை கல்வி நிறுவனத்தில் 18.7.2025 அன்று நடைபெற்ற தமிழ் மற்றும் ஆங்கில பேச்சுப் போட்டியில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு தலா முதல் பரிசாக ரூ.1 இலட்சம், இரண்டாம் பரிசாக 50 ஆயிரம் ரூபாய் மற்றும் மூன்றாம் பரிசாக 25 ஆயிரம் ரூபாய் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

நேற்றைய தினம் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் சார்பில் நடைபெற்ற தமிழ் மற்றும் ஆங்கில பேச்சுப் போட்டியில் மாவட்ட அளவில் வெற்றி பெற்ற 228 மாணவ, மாணவியர்கள் மற்றும் இதில், மாநில அளவில் முதலிடம் பெற்ற மாணவ/மாணவியர்களுக்கு இடையே போட்டி நடைப்பெற்று அவற்றில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற (தமிழ் மற்றும் ஆங்கிலம்) 6 மாணவ/மாணவியர்கள் ரூ.30 இலட்சத்து 10 ஆயிரம் பரிசுத் தொகையாகவும், பாராட்டு சான்றிதழ்களையும் வழங்கி வாழ்த்தினார்.

இந்த நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன், சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் அருட்தந்தை சொ.ஜோ அருண், சே,ச, துணைத் தலைவர் இறையன்பன் குத்தூஸ், பிற்படுத்த ப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் முனைவர் சா.விஜயராஜ் குமார், பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் முனைவர் சீ.சுரேஷ்குமார், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை சிறப்பு செயலாளர் ஈ.சரவணவேல் ராஜ், மிக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நல ஆணையர் திருமதி வ.கலையரசி, தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் உறுப்பினர் செயலர் திருமதி மு.ஆசியா மரியம், மற்றும் ஆணைய உறுப்பினர்கள், பேராசிரியர் ஜே.கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், பேராசிரியர் ஜெ.ஹாஜாகனி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திரு.வி.க. மண்டலம் 73 - 75 வார்டுகளில்

# ரூ.11. 77 கோடி மதிப்பில் பள்ளிக் கட்டிடம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு அடிக்கல் நாட்டினார்!

சென்னை, ஜூலை 22 -

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, அமைச்சர் பி.கே.சேகர்பாபு 19.07.2025 அன்று ரூபாய் 11.77 கோடி மதிப்பீட்டில் திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு 73 மற்றும் வார்டு 75ல் இரண்டு நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையக் கட்டடம், மற்றும் சென்னை உயர்நிலைப் பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கான பணிகளை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

தேசிய நகர்ப்புற சுகாதார இயக்கம் மற்றும் மாநகராட்சி மூலதன நிதி ஆகியவற்றின் கீழ் திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு73, குக்ஸ் சாலை வாடியா நகர் பகுதியில் ரூபாய் 3.05 கோடி மதிப்பீட்டிலும், வார்டு75, நம்மாழ்வார் பேட்டை 2ஆவது தெரு பகுதியில் ரூபாய் 2.28 கோடி மதிப்பீட்டிலும் என இரண்டு நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையக் கட்டடத்திற்கான பணிகளை அமைச்சர் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இந்த நகர்ப்புற சுகாதர மையங்களில் அவசர அறை, மருத்துவ அலுவலர் அறை, மருந்தகம், ஊசிப் போடும் அறை, ஆய்வக அறை, ஆவண அறை, மருந்து இருப்பு அறை, மருந்துவ ஆலோசனை அறை, பதிவு அறை, பணியாளர்களின் அறை, ஆண்கள் பெண்கள் கழிவறை, காத்திருப்பு கூடம் உள்ளிட்ட வசதிகள் அமையவுள்ளன.

இதனை தொடர்ந்து, வார்டு 73, புளியந்தோப்பு அம்மையம்மாள் தெரு பகுதியில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபாய் 6.44 கோடி மதிப்பீட்டில் சென்னை உயர்நிலைப் பள்ளிக்கான கட்டுமானப் பணிகளை அமைச்சர் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இப்பள்ளிக் கட்டடம் 17,569 சதுர அடி பரப்பளவில் தரைத்தளம், முதல் தளம், இரண்டாம் தளத்துடன் கட்டடபட்டவுள்ளது. இதில் 19 வகுப்பறைகள், தலைமையாசிரியர் அறை, இரண்டு ஆசிரியர் அறை, மேடை மற்றும் கழிப்பறை வசதிகளுடன் கட்டடபடவுள்ளது.

இந்நிகழ்வுகளின்போது, மேயர் திருமதி ஆர். பிரியா, திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, மத்திய வட்டார துணை ஆணையர் திரு.எச்.ஆர்.கௌஷிக், நிலைக்குழுத் தலைவர் (கல்வி) பாலவாக்கம் த. விசுவநாதன், மண்டலக் குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர் ச.அம்பேத்வள வன், மண்டல அலுவலர் (பொ) ஆர்.சரவணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# கலைஞர் மகன் முதல்வர் ஸ்டாலின் அரசு மரியாதை! நிலை உயரச் செய்துவிட்டார் வாராயோ வாராயோ!

அள்ளக் குறையாத
அமுதத் தமிழமுதே
சொல்லாமல் சோராமல்
சொல்லரசே சென்றதெங்கே?

பிள்ளைக் கவியமுதாய்ப்
பீடுநடை நடந்தாய்!
கள்ளமில்லா வாழ்வரசே
கருணையே எங்கு சென்றாய்?

வெல்லும் தமிழ்ச் சொல்லை
வெற்றிக்கு அளித்தவனே!
வெல்லக் கவியமுதே
வேந்தனே சென்றதெங்கே?

நட்பின் நாயகனே
நடைப்பயண முதல்வனே!
சிட்டாய் பறப்பாயே
சீராளா சென்றதெங்கே?

உலகத் தமிழர்களை
உயிர்மூச்சாய்க் கொண்டவனே!
கலகம் விளைவிப்போர்
களைந்தவனே எங்கு சென்றாய்?

கொள்கைவழி நின்றாய்
கொடுமைகண்டு சீறினாயே
பல்துறை வித்தகனே
பாரரசே எங்கு சென்றாய்?

தள்ளாத வயதினிலும்
தளராமல் நின்றவனே
வெல்லும் தமிழுலகின்
வேரே எங்கு சென்றாய்?

சிரிப்பு அழகரசே
சிலிர்த்து ஒலித்திடுமே



விழிக்கும் உன் பார்வை
விரைந்து சென்றதேனோ?

காப்பியக் காவியங்கள்
கடமையாய்த் தந்தவனே
ஒப்பிலா நாயகனே
உத்தமனே எங்கு சென்றாய்?

ஒரு லட்சம் கவிதைகளை
ஓயாமல் எழுதியவன
கருமமே கண்ணான
காவியமே எங்கு சென்றாய்?

பண்டை அரசர்களின்
பேருருவாய் வந்தவனே!
சண்டமாருதம் செய்த
சாதனையே எங்கு சென்றாய்?

மீசை துடிக்க கவிபாடி
மீமிசை ஆட்கொண்டாய்
ஆசை கவிஇன்பம்
ஆரணங்கே எங்கு சென்றாய்?

தலைவர் கலைஞர்மகன்
தகுதிஅரசு மரியாதை
நிலைஉயரச் செய்துவிட்டார்
வாராயோ வாராயோ?

தலைவர் பெருமக்கள்
அணிவகுத்து நிற்கின்றார்
தலைமகனே பெருமகனே
தவமகனே வாராயோ?

எளிய மக்களெல்லாம்
ஏந்திய கொடையரசே!
அழுது புலம்புகிறார்
ஆரமுதே வாராயோ?

உலகம் முழுவதிலும்
உனைஅழைத்துக் கேட்கின்றார்
களம்கண்ட நாயகனே
தாயமுதே வாராயோ?

பெருங்கவிக்கோ உலகமெலாம்
பேராகி நின்றவனே
அருமைக் குலக்கொழுந்தே
அழுதாலும் வாராயோ?

கன்றாய்க் கதறுகிறோம்
கதிஇன்றிப் பிதற்றுகிறோம்
தென்றலே தேனமுதே
வாராயோ வாராயோ?

அன்னை அருகினிலே
அடக்கம் ஆனாயே
கண்ணே கற்பகமே
கவியாய் இருக்கின்றாய்!

ஆண்ட நாயகபுரம்
அகிலப் புகழ் பெறவே
மாண்ட பெருங்கவிக்கோ
மண்ணிலே வாழ்கின்றார்!

தமிழ்மாமணி வா.மு.சே. திருவள்ளுவர்

### குவைத்:

# தி.மு.க. அயலக அணி குவைத் நிர்வாகக் கூட்டம்!

## பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன் தலைமையில் நடைபெற்றது!



குவைத், ஜூலை 22-

குவைத்தில் தி.மு.க. அயலக அணி குவைத் மண்டலத்தின் மாதாந்திர கலந்தாய்வுக் கூட்டம் கழக அயலக அணியின் தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி மற்றும் செயலாளர் புதுக்கோட்டை எம்.எம்.அப்துல்லா எம்.பி ஆகியோரின் வழிகாட்டுதலின்படியும், அணியின் மாநில பொறுப்பாளர், கழக துணை பொதுச்செயலாளர் திருச்சி சிவா எம்.பி ஆலோசனையின் படியும், குவைத் மண்டல பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன் தலைமையில், அமைப்பின் செயலாளர் புதூர் உத்தமனூர் ஜலீல் முஸ்தபா, இணைச் செயலாளர்கள் ஆயங்குடி சையது முஸ்தபா, குடந்தை சி.தியாகராஜன், சேகரை வெ.செல்லதுரை, பொருளாளர் புதுவை அ.அறிவுமணி ஆகியோர் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது.

கலந்தாய்வு கூட்டத்தில் கடந்த ஜூன் மாதம் 13ஆம் தேதி நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, அயலகத் தமிழர் எழுச்சி மாநாடு மற்றும் நாடு போற்றும் நான்காண்டு சாதனை விளக்க பொதுக் கூட்டத்தின் வெற்றியை கொண்டாடும் விதமாக அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. அந்நிகழ்ச்சியின் வரவு செலவு கணக்குகள் நிர்வாகிகளின் முன்னிலையில் சரிபார்க்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது.

அமைப்பின் அடுத்தகட்ட நகர்வு குறித்து ஆலோசிக்கப்பட்டது. குவைத் மண்டல அமைப்பு சிறப்புடன் செயல்பட நிர்வாகிகளின் ஆலோசனைகளையும் பெறப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் அமைப்பின் துணைச் செயலாளர்கள் முத்துப்பேட்டை ம.சபரிவாசன், விழுப்புரம் ஐ.ஜஹாங்கீர், உளுந்தூர்பேட்டை மு.நஜீர் அகமது, இளைஞர் அணி துணைச் செயலாளர் விழுப்புரம் எஸ். அம்ஜத்அலி, தொண்டரணி செயலாளர் தானிப்பாடி சே.அஷ்ரப்அலி, தொண்டரணி துணைச் செயலாளர் உடையார்பாளையம் செந்தில்குமார், பொறியாளர் அணி துணைச் செயலாளர் மருதூர் ம.பிரேம்குமார், தொழிலாளர் நல அணி செயலாளர் கூத்தாநல்லூர் ஏ.சாகுல் ஹமீது, ஓட்டுநர் நல அணி செயலாளர் திருச்சி ஏ.ஜே.எம்.இஷாக் ஜக்காரியா, விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் பரங்கிப்பேட்டை ம.நசூருதீன் முகம்மது, ஓட்டுனர் நல அணி துணைச் செயலாளர்கள் திருவாரூர் திருவரங்கன், லட்சுமாங்குடி சசிகுமார், சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் குடந்தை ஆர்.முருகன் மற்றும் ஏராளமான அமைப்பின் உறுப்பினர்களும், கழக உடன்பிறப்புகளும் கலந்து கொண்டனர்.

இந்த கலந்தாய்வுக் கூட்டத்தில் வருகின்ற 2026 ஆம் ஆண்டு மீண்டும் தமிழ்நாட்டில் கழக ஆட்சி மலர்ந்திட, கழகத் தலைவர் தளபதியின் தலைமையின் கீழ் தமிழகம் வளர்ச்சி பாதையில் தொடர்ந்திட தி.மு.க. அயலக அணி குவைத் சார்பாக தங்களது பங்களிப்பை களப்பணியின் மூலம் செலுத்திட வேண்டுமென ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும் இந்த நாள் முதல் ஒவ்வொரு நிர்வாகியும் தமிழ்நாட்டில் உள்ள தங்களின் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் என தெரிந்த அனைவருக்கும் கழக அரசின் செயல்பாடுகளையும், செயல்திட்டங்களையும், நலத்திட்ட உதவிகளையும் எடுத்துக் கூறியும், தமிழக அரசால் புலம்பெயர் தமிழர்களுக்கு கிடைக்கும் சலுகைகள் மற்றும் நலத்திட்டங்களையும் எடுத்துக் கூறி கடிதம் மற்றும் வாட்ஸ் அப் குறுஞ்செய்தி அனுப்ப வேண்டும். அந்த கடிதங்களின் மூலம் குறைந்தபட்சம் ஒரு நிர்வாகி 100 வாக்குகளை யாவது கழக வேட்பாளருக்கு கிடைத்திட பாடுபட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும் 2026 ஆம் ஆண்டு நடக்க இருக்கும் தேர்தலில் அனைவரும் தமிழ்நாடு சென்று வாக்களிக்க வேண்டும் எனவும், முடிந்தவரை நிர்வாகிகள் அவரவர் தொகுதிக்கு சென்று அந்தத் தொகுதியின் கழக வேட்பாளருக்காக களப்பணி ஆற்றிட வேண்டும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும் வருகின்ற ஆகஸ்ட் மாதம் ஏழாம் தேதி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி முத்தமிழ றிஞர் கலைஞர் அவர்கள் செய்த சாதனைகள் மற்றும் தமிழ்நாடு மக்களுக்கு தந்த நலத்திட்டங்களை போற்றும் வகையில் புகழஞ்சலி கூட்டம் நடத்துவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தின் இறுதியில் அமைப்பின் துணைப் பொருளாளர் திருவடத்தனூர் ஏ.எஸ். முகமது ரஃபிக் நன்றி கூறினார்.



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க கழக இளைஞரணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைபடி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், மேலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் கிராமம் கிராமமாகச் சென்று பொது மக்களைச் சந்தித்து மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள், கழகத்தினர் மற்றும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்றனர்.



விழுப்புரம் மாவட்டம், மயிலம் ஊராட்சி ஒன்றியம் ரெட்டணை ஊராட்சியில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமினை செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுவைப் பெற்றுக் கொண்டார். உடன் முகாம் கண்காணிப்பு அலுவலரும், ஊரக வளர்ச்சி துறை உதவி இயக்குனர் தணிகை ரெத்தனமாலா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், ஒன்றியப் பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன், மயிலம் வடக்கு ஒன்றியச் செயலாளர் மணிமாறன், வட்டார வளர்ச்சி அலுவலர் சிவக்குமார் உள்ளனர்.